சுருக்கம்

வேளாண்மை-உழவர் நலன் – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் - 2022-2023-ஆம் ஆண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு - ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு உழவர் சந்தை வீதம், மொத்தம் 37 உழவர் சந்தைகளில், விவசாய விளைபொருட்களின் விற்பனையை செயல்பாட்டு வழிமுறைகளின்படி மாலை நேரத்தில் செயல்படுத்த அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை-உழவர் நலத் (வேவி3) துறை**

அரசாணை (நிலை) எண். 111

நாள் 30.05.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம்
வைகாசி திங்கள் 16 ஆம் நாள்

படிக்கவும்:

இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்,
கடித எண் உ.ச.2 /9397 / 2022, நாள் 25.04.2022 மற்றும் 29.04.2022

******

ஆணை:

காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனைக்காக, விவசாயிகள் மற்றும் நுகர்வோர்கள் இடையே நேரடி சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்க, 1999- ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு "உழவர் சந்தை" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. சிறு மற்றும் குறு விவசாயிகளை வணிகர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கிடவும், முனைய சந்தை போல நுகர்வோருக்கு நேரடியாக விற்கவும் இது திட்டமிடப்பட்டது. உழவர் சந்தைகளின் முக்கிய நோக்கம், விவசாயிகளுக்கு இலாபகரமான விலையை உறுதி செய்வதும், நுகர்வோர்களுக்கு தரமான, பசுமை காய்கறிகள் மற்றும் பழங்களை, நியாயமான விலையில் வழங்குவதும் ஆகும். மேலும், உழவர் சந்தைகளில், விவசாயிகளுக்கு கடைகள், எடைத் தராசு, பிற அடிப்படை வசதிகள் போன்றவை வழங்கப்பட்டு வருகிறது.

2. 2022-2023-ஆம் ஆண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை மேற்கொண்டுள்ளார்:-

<u>அறிவிப்பு எண்: 54</u>

<u>உழவர் சந்தைகளில் பிற்பகலிலும் வேளாண் பொருட்கள் விற்பனை</u>

"தற்போது உழவர் சந்தைகளில் காலை நேரங்களில் மட்டுமே காய்கறி விற்பனை மேற்கொள்ளப்படுகிறது. மாலை நேரங்களிலும்

உழவர் சந்தைகள் செயல்பட வேண்டும் என்ற பொதுமக்கள், விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று, மாவட்டத்திற்கு ஒரு உழவர் சந்தையில், மாலையில் சிறுதானியங்கள், பயறுவகைகள் உள்ளிட்ட விளைபொருட்களும் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய அனுமதிக்கப்படும்".

3. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்கள், தமது கடிதத்தில், தற்போது 180 உழவர் சந்தைகள் காலை 6.00 மணி முதல் இயங்கி வருகின்றன என்றும், காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனை செய்ய உழவர் சந்தைகள் நீண்ட காலமாக நண்பகல் வரை இயங்கி, பின்னர் விற்பனை முடிவடைகிறது. அழுகக்கூடிய பொருட்கள் தவிர, பிற வேளாண் விளைபொருட்களான தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றையும் விவசாயிகள் உற்பத்தி செய்கின்றனர். இந்த விளைபொருட்களை விற்பனை செய்ய உதவும் வகையில், விவசாயிகள் மற்றும் நுகர்வோரின் கோரிக்கையின் அடிப்படையில், சிறுதானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் உள்ளிட்ட விவசாய விளைபொருட்களை, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாலை நேரத்தில், ஒரு உழவர் சந்தையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

4. இத்திட்டத்தின் நோக்கங்கள் குறித்து, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

1. விவசாய விளைபொருட்கள் எந்த இடைத்தரகர்களும் இல்லாமல் நேரடியாக சந்தையை வந்தடைதல்.
2. இதன்மூலம், விவசாயிகளும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களும், கூட்டாகப் பயன்பெற உதவுதல்.
3. விவசாயிகளுக்கும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கும் வருவாயை உறுதி செய்தல்.
4. நுகர்வோர்கள் பயன்பெற உதவுதல்

5. இத்திட்டம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையால் செயல்படுத்தப்படும் என்றும், மாவட்ட அளவில், மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலின் கீழ், வேளாண்மைத் துணை இயக்குநர், வேளாண் வணிகம் மூலம் செயல்படுத்தப்படும் என்றும், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு உழவர் சந்தை வீதம், மொத்தம் 37 உழவர் சந்தைகள் மாலை நேரத்தில் இயங்க தேர்வு செய்யப்படும் என்றும், மாலை நேரங்களில் உழவர் சந்தையை நிருவகிப்பதற்குத் தேவைப்படும் அலுவலர்கள், பணியாளர்கள் குறித்து வேளாண்மைத் துணை இயக்குநர் (வேளாண்மை வணிகம்) திட்டமிட வேண்டும் என்றும், உழவர் சந்தையின் மாலை நேர வேலை நேரம், ஒவ்வொரு நாளும், மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை என்றும், காய்கறி மற்றும் பழங்கள் விற்பனைக்காகப் பின்பற்றப்படும் நடைமுறைகளின்படி கடை ஒதுக்கீடு செய்யப்படும் என்றும், விற்பனை விலை அந்தப் பகுதியில் நிலவும் பொருளின் சராசரி சில்லறை விலையை விட அதிகமாக இருத்தல் கூடாது என்றும் வேளாண்மை விற்பனை மற்றும்

வேளாண் வணிகத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், விவசாயப் பொருள்களை நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்வதன்மூலம் விவசாயிகள் கூடுதல் லாபம் பெறுவர் என்றும், விவசாயப் பொருட்கள் நியாயமான விலையில் நுகர்வோர்களைச் சென்றடையும் என்றும், விவசாயிகள் மற்றும் நுகர்வோர்கள் இடையே சிறந்த சந்தை இணைப்புகள் உருவாகும் என்றும், விவசாயிகளின் சமூக மற்றும் பொருளாதார நிலை மேம்படும் என்றும், அதிக எண்ணிக்கையிலான நுகர்வோர்கள் பயனடைவார்கள் என்றும், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களையும் நுகர்வோர்கள் வாங்கிப் பயன்பெறுவர் என்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

6. எனவே, 2022-2023-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு உழவர் சந்தை வீதம், மொத்தம் 37 உழவர் சந்தைகளில், சிறுதானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் உள்ளிட்ட விவசாய விளைபொருட்களின் விற்பனையை மாலை நேரத்தில் செயல்படுத்தும் பொருட்டு கீழ்க்காணும் பொருண்மைகளின்மீது அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

(i) சம்பந்தப்பட்ட வேளாண்மைத் துணை இயக்குநர் (வேளாண்மை வணிகம்) மூலம் திட்டத்தைச் செயல்படுத்துதலுக்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநருக்கு அனுமதி.

(ii) நுகர்வோர்கள் வருகையின் அடிப்படையில் உழவர் சந்தையை தேர்ந்தெடுக்கவும், தேவைப்படும்போது உழவர் சந்தையை மாற்றவும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநருக்கு அனுமதி.

(iii) மாலை நேர உழவர் சந்தையை, மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செயல்படுத்த வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநருக்கு அனுமதி.

(iv) தற்போதுள்ள மனித வளத்தை வேலை முறை பட்டியல் அடிப்படையில் பயன்படுத்த வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண்மை வணிகம்) அவர்களுக்கு அனுமதி.

(v) சிறு தானியங்கள், பருப்பு வகைகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் உள்ளிட்ட விவசாய விளைபொருட்களை விற்பனை செய்ய அனுமதி.

(vi) காய்கறிகள் மற்றும் பழங்களுக்குப் பின்பற்றப்படும் நடைமுறையின்படி கடை ஒதுக்கீடு செய்ய அனுமதி.

(vii) பிற்பகல் விற்பனையின் செயல்பாட்டிற்கான கூடுதல் செலவினத்தை, சம்பந்தப்பட்ட விற்பனைக் குழு நிதியிலிருந்து

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு மேற்கொள்ள அனுமதி.

(viii) மாலை நேர உழவர் சந்தையினை செயல்படுத்துவதற்கு இணைப்பில் உள்ள செயல்பாட்டு வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை-32.
தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை-32.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A/E, / Audit / AAD / G&SSA / E&RSA) சென்னை-18.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-108.
முதுநிலை செயலர் / செயலர், விற்பனைக்குழு (தொடர்புடையது)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)
நகல்
நிதித் (வேளாண்மை-உழவர் நலன்) துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (வேளாண்மை-உழவர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு.3 / வ.(ம)தி) துறை, சென்னை-9.
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை-9.
கோ.எண். 10491/வேவி3(1)/2022
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

30/5/2022
பிரிவு அலுவலர்

30/5/2022

## இணைப்பு

அரசாணை (நிலை) எண்: 111, வேளாண்மை-உழவர் நலத் (வேவி3) துறை,

நாள்: 30.05.2022

## மாலை நேர உழவர் சந்தையினை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வேலை நேரம் | - | ஒவ்வொரு நாளும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை |
| 2. | தகுதி | - | அன்றைய காலை விற்பனையில் கலந்து கொள்ளாத விவசாயிகள் அனுமதிக்கப்படலாம். இதற்கான திருத்தம் தேவைப்பட்டால் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் மேற்கொள்ளலாம். |
| 3. | அடையாள அட்டைகள் | - | மாலை உழவர் சந்தைகளில் பங்கேற்க விரும்பும் தகுதியான விவசாயிகள் / உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தனி அடையாள அட்டைகள் வழங்கப்படும். |
| 4. | கடை ஒதுக்கீடு | - | தற்போதுள்ள நடைமுறை தொடரும். |
| 5. | விளை பொருட்கள் | - | உணவு தானியங்கள், சிறுதானியம், பருப்பு வகைகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் (FPO) மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், வெல்லம், காளான், நாட்டு முட்டை போன்றவை விற்பனை செய்ய அனுமதிக்கலாம். |
| 6. | விற்பனை விலை | - | விற்பனை விலை அந்தப் பகுதியில் நிலவும் பொருளின் சராசரி சில்லறை விலையைவிட அதிகமாக இருத்தல் கூடாது. இதனை சம்பந்தப்பட்ட வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அவர்களால் உறுதிப்படுத்தப்படும். |
| 7. | மனித வளம் | - | உழவர் சந்தையை பிற்பகல் நேரத்தில் நிர்வகிப்பதற்கான மனித வளத்தை வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அவர்கள் திட்டமிடலாம். |
| 8. | பராமரிப்பு | - | உழவர் சந்தைகள் ஏற்கெனவே உள்ள நபர்களை கொண்டு சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைக்கப்பட வேண்டும். காலை நேர செயல்பாடு முடிந்தவுடன் தூய்மை செய்யப்பட வேண்டும். மீதமுள்ள காய்கறிகள், பழங்கள் கடைகளுக்குள்ளேயே வைக்காமல் தனியாக ஓரிடத்தில் வைப்பதை உறுதி செய்யவேண்டும். மாலை நேர சந்தைக்கு கடைகள் காலியாக வைக்கப்பட வேண்டும். |
| 9. | விளக்கு வசதி | - | உழவர் சந்தைக்குள் போதுமான விளக்கு வெளிச்சம் இருத்தல் வேண்டும், |
| 10. | உள்கட்டமைப்பு | - | தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகள் பிற்பகல் விற்பனைக்கும் பயன்படுத்தப்படும். |

11. செலவு - பிற்பகல் விற்பனையின் செயல்பாட்டிற்கான கூடுதல் செலவினத்தை, சம்பந்தப்பட்ட விற்பனைக் குழு நிதியிலிருந்து, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு மேற்கொள்ள அனுமதி.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

// உண்மை நகல் //

30/5/2022
பிரிவு அலுவலர்

30.5.2022